Crl.Misc.39

D E P O S I T I O N   O F   W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.202/2023

**P.W**.4 (LW4)

| | |
|---|---|
| Name | : திரு. அரிதாஸ் |
| Father/Husband Name | : திரு, மாணிக்கம் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் இல்லை.  மனு தாக்கல் செய்து ஏற்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.10.2025

முதல் விசாரணை - சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.  நான் தற்போது தத்தலூர் கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து  வருகிறேன்.  விபத்தில் இறந்து போன ராஜேஷ் எனது அண்ணன் மருமகன் ஆவார்.

2) கடந்த 2022ம் வருடம் ஒரு நாள் எனது அண்ணன் மருமகன் ராஜேஷ் அவருக்கு சொந்தமான இரு சக்கர வாகனத்தில் தத்தலூரிலிருந்து மறைமலை நகருக்கு வேலைக்காக சென்றுக் கொண்டிருந்த போது தத்தலூர் காடு அருகே செல்வஸ்ரீ நகர் அருகே சென்றபோது எதிரே வந்த மகேந்திரா டூரிஸ்ட் வேன் எனது அண்ணன் மருமகன் ராஜேஷ் சென்ற இரு சக்கர வாகனத்தின் மீது மோதியதில் ராஜேஷ் டூரிஸ்ட் வேனில் சிக்சி 15 மீட்டர் அளவிற்கு இழுத்துக் கொண்டே சென்றது. அந்த விபத்தில் அவருக்கு பலத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்.  போன் மூலம் எனக்கு தகவல் கிடைத்து நான் சம்பவ இடம் சென்று பார்த்தேன்.  ஆம்புலன்ஸ் மூலம் என் அண்ணன் மருமகன் ராஜேஷ்சை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். கேள்விப்பட்டு தான் தெரிந்துக் கொண்டேன் என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் ஒரு குறுகிய S வளைவு கொண்ட சாலை என்றால் சரிதான்.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.

Case No. CC.202/2023

**P.W**.5 (LW6)

| | |
|---|---|
| Name | : திரு. கிருஷ்ணன் |
| Father/Husband Name | : திரு, முருகப்பன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் இல்லை. மனு தாக்கல் செய்து ஏற்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.10.2025

முதல் விசாரணை - சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது தத்தலூரில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். சாட்சி காண்டீபனை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.

2) கடந்த 11.02.2022ம் தேதி மாலை 4.30 மணியளவில் விபத்து நடந்த இடமான தத்தலூர் காடு அருகே நான் சென்று கொண்டிருந்தபோது விபத்து நடந்த இடத்தில் போலிசார் இருந்தார்கள். அவர்கள் விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டு படம் வரைந்தார்கள். அதில் நானும் சாட்சி காண்டீபனும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். **(பார்வை மகசர் அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை,</u>**

விபத்து குறித்து நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். போலிசார் என்னிடம் காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் தான் கையொப்பம் வாங்கினார்கள். நான் கையொப்பம் போட்ட ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.
(Sd)S.Vineeth
J.M./TKM.